JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 105/2021 Date: 20.10.2023 P.W. 1

பெயர் : பூ.மெர்லின்
தந்தை /கணவர் பெயர் : சி.பூமணி

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 20th day of October 2023

குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1. என் கணவரின் முகத்தில் எவ்வாறு தழும்பு ஏற்பட்டது என்றால் என் கணவர் பிறவியிலிருந்தே special child ஆவார். திருமணத்திற்கு முன்பாக அவர் இதை பற்றி கூறவில்லை. திருமணம் முடிந்து முதல் நாள் அன்று அவரது முகத்தில் தழும்பு இருந்தது. அதை விசாரித்தபோது அது விபத்தில் ஏற்பட்டது என்று கூறினார்கள். எனக்கு குழந்தை பிறந்த பின்னர் தான் தான் ஒரு special child என்றும் 8 அறுவை சிகிச்சைகள் செய்ததாகவும் அவர் கூறினார். விவரம் தெரியவந்தபோது நான் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் நான் அதற்காக புகார் கொடுக்கவில்லை. திருமணம் நடந்து முடிந்த பின்னர் நாங்கள் வாழ்ந்த வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் நானும் என் கணவரும் மட்டும் தான் அங்கு குடியிருந்தோம், வேறு யாரும் இல்லை. அதற்கு முன்பாக மேற்படி வீட்டை வாடகைக்கு விட்டுயிருந்தார்கள் என்றால் சரிதான்.

2. நானும் என் கணவரும் இருந்தபோது என் மகளுக்கு என்ன வயது என்றால் 11 மாதங்கள் ஆகும். நாங்கள் பிரியும் வரை கொடுங்கையூர் வீட்டில் யார் யார் வசித்து வந்தோம் என்றால் நானும் என் கணவரும் வசித்து வந்தோம், அடிக்கடி என் மாமனார் மாமியார் மற்றும் பிரேம் ஆகியோர்கள் வந்து தங்குவார்கள். திருமணம் முடிந்த பின்னர் நானும் என் கணவரும் சந்தோஷமாக சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்றாலும் என்னுடைய மாமனார், மாமியார் விருகம்பாக்கத்தில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. கொரோனா காலக்கட்டத்தில் ஏற்பட்ட நஷ்டத்தால் 2ம் எதிரி விஜி அவருக்கு சொந்தமான வீட்டை விற்பதற்கு நடவடிக்கை எடுத்தார் என்றால் சரியல்ல, வீட்டை விற்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது கொரோனா காலக்கட்டம் வரவில்லை. மேற்படி வீட்டை என்னுடைய பெயரில் எழுதி தரவேண்டும் என்று ஆரம்பகாலக்கட்டத்திலிருந்து 2ம் எதிரி விஜியிடம் பிரச்சினை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. வீட்டை விற்க வேண்டாம் என்று தான் கூறினேன்.

3. வீட்டை எனது பெயரிலோ எனது கணவர் பெயரிலோ மாற்றி கொடுக்க வேண்டும் என்று என் கணவரை தூண்டிவிட்டு என் கணவர் என் மாமியாருடன் பேச்சு வார்த்தையில் இல்லை என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக என்னுடைய மாமியாரான 2ம் எதிரி விஜி விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு சிஎஸ்ஆர் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் மாமியார் என்னை முடியை பிடித்து இழுத்து அடித்தார் என்று நான் கூறியுள்ளேன் என்றாலும் அது சம்மந்தமாக நான் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை, நான் கருவுற்று இருந்ததால் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை, வீட்டில் இதை பற்றி கூறக்கூடாது, கூறினால் என் கணவருடன் சேர்ந்து வாழ விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். வீடு விற்பனைக்கு வரும் வரை நானும் என் கணவரும் ஒன்றாக சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம் என்றாலும் வீடு விற்பனையால் தான் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. என் கணவரை நான் தான் கார் வாங்குமாறு தூண்டினேன் என்றால் சரியல்ல, என் குழந்தைக்காகவும் வேலைக்கு செல்வதற்காகவும் கார் வாங்குவதாக என்னிடம் பிரச்சனை செய்தார். அப்பொழுது கார் வாங்குவதற்கு என் கணவருக்கு வசதி இல்லாமல் இருந்தார் என்றாலும் கார் வாங்குவதற்கு என் அப்பா பணம் கொடுத்து உதவினார் என்றாலும் மேற்படி பணத்தை என் கணவர் திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல, பணத்தை திருப்பி தரவில்லை. நானும் என் கணவரும் பெருங்குடியில் உள்ள வீட்டிற்கு குடித்தனம் சென்ற போது 2ம் எதிரி விஜி தான் ரூ.50,000 பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் அப்பா தான் ரூ.80,000 பணம் கொடுத்தார். குழந்தை பிறந்த பின்னர் என்னுடைய மாமனார் மாமியார் வீட்டிற்கு நான் ஒரு முறை கூட

செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவருக்கு என் மீதும் என் குழந்தை மீதும் தான் பாசம் இருந்தது என்றாலும் அதனால் அவருடைய அப்பா அம்மாவை சென்று பார்க்கவில்லை , பேசவில்லை என்றால் சரியல்ல.

5. என் கணவருக்கு குடிக்கும் பழக்கம் இல்லை என்றாலும் நான் தான் ஒயின் போன்ற மதுபான பொருட்களை வாங்கி வருமாறு கூறி இருவரும் சேர்ந்து மது அருந்துவோம் என்றால் சரியல்ல. என் கணவரும் என் மாமியார், தம்பி பிரேம் ஆகியோர்கள் ஒன்றாக சேர்ந்து மது அருந்துவார்கள். நானாகவே தான் என்னுடைய பொருட்களை எடுத்துக்கொண்டு யாரிடமும் சொல்லாமல் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, என் கணவர் குடித்துவிட்டு என்னை அடித்து பணம் கேட்டு துண்புறுத்தியதால் தான் நான் வீட்டைவிட்டு சென்றேன். என் குடும்பத்திற்கும் என் கணவர் குடும்பத்திற்கும் நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சுமார் 5 வழக்குகள் இருதரப்பிலும் நிலுவையில் உள்ளது. என்னனென்ன வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தற்போது மேற்படி விவரங்கள் ஞாபகத்தில் இல்லை.

6. போலீஸ் விசாரணையில் தாலிச்செயின் உட்பட அனைத்து நகைகளையும் வாங்கிக்கொண்டு தான் என்னையும் என் கணவரையும் அணிமுனுக்கு அனுப்பி வைத்தார்கள் என்று கூறிவிட்டு நீதிமன்ற விசாரணையில் தாலிச்செயின் தவிர மற்ற நகைகளை வாங்கிக்கொண்டார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் தாலிச்செயின் உட்பட அனைத்து நகைகளையும் வாங்கிக்கொண்ட பின்னர் தான் தங்களை அணிமூனுக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கும் என் கணவர் குடும்பத்திற்கும் எந்தவித பிரச்சினையும் ஏற்படவில்லை என்றாலும் அவர்கள் யாரும் என்னை வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தவில்லை என்றாலும் வீட்டை விற்பது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சினையால் தான் நான் விரோதம் கொண்டு அவர்கள் மீது பொய் புகார் கொடுத்தேன் என்றாலும் அதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் என்னுடன் வாழவேண்டும் என்பதற்காக தான் சேர்ந்து வாழ்வதற்காக குடும்ப நல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

7. அம்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதால் அதிலிருந்து தப்பிப்பதற்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். சேர்ந்து வாழ்வதற்காக மனு தாக்கல் செய்தபோது நீதிமன்றத்தில் counseling அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் என் கணவர் counseling சரியாக வரவில்லை. counseling நடைபெற்ற போது ஏற்பட்ட பிரச்சினையில் நான் என் கணவர் வீட்டார் மீதும் வழக்கறிஞர் திரு.கண்ணன் மீதும் புகார் கொடுக்கப்பட்டு தனிப்புகார் மூலமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கறிஞர் திரு. கண்ணன் இறந்தபின்னரும் அந்த வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். என் கணவர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றாலும் எந்தவிதமான வரதட்சனை கொடுமையும் எனக்கு இழைக்கபடவில்லை என்றாலும் வீட்டை விற்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டதால் என் அப்பா ஓய்வு பெற்ற காவல் அதிகாரி என்பதை பயன்படுத்தி பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate,
Ambattur